## In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 24/2023 Date:20.11.2025**

**PW2)- கங்காதரன்**

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ன் படி எனது அப்பாவிற்கு கிடைத்த சொத்திற்கு நான் சொத்துவரி செலுத்தினேன் என்றால் சரிதான். மேற்படி சொத்துவரி ரசீதை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்தை நான் எனது பெயரில் பட்டா பெயர்மாற்றம் செய்து அனுபவித்து வந்தேன் என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கு 4 பகுதிகளுக்கு எல்கை காட்டியுள்ளளேன் என்றால் சரிதான். மேறப்டி சொத்திற்கு 4 பக்க எல்கைகள் காட்டவில்லை என்றாலும் காம்பவுண்ட் சுவர் கட்டவில்லை என்றாலும் காம்பவுண்ட் சுவர் கட்ட முயற்சித்தேன் அதை பிரதிவாதிகள் தடுத்துவிட்டார்கள்.

2) காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் மீது புகார் கொடுத்தது சம்மந்தமாக ரசீது எதுவும் வழங்கினார்கள் என்றால் காவல் நிலையததில் புகார் கொடுக்கவில்லை. பிரதிவாதிகளின் தந்தை தபசில் சொத்தை 1960 ல் கிரையம் பெற்றுள்ள விபரம் தெரியுமா என்றால் அது போலி ஆவணம். சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின் அடிப்படையில் தபசில் சொத்தை பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல அது எனக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும்.

3) நான் எனது பிராதில் ஒர சர்வே எண் சொத்தும் நிரூபண வாக்கு்முலத்தில் 2 சர்வே எண்களுக்கான சொத்தும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரியல்ல ஒரே சர்வே எண். 52/88 சொத்திற்கு தான் நான் கட்சி செய்கிறேன். ரீ சர்வே 297/16 ல் ஒரு கோவில் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. ச.எண்.297/17 பி சொத்திற்கு பிரதிவாதியின் பெயருக்கு பட்டா உள்ளது என்றால் அதுபோலி பட்டா ஆகும். ச.எண்.52/88 சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்று எனது பிராதில்

குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல குறிப்பிட்டுள்ளேன். மேறப்டி ச.எண் சொத்து உட்பிரிவு ஆன விபரத்தை எனது பிராதில் தெரிவிக்கவில்லை என்றால் உட்பிரிவு ஏற்படவில்லை அதனால் தெரிவிக்கவில்லை. எனது கைவசம் இல்லாத அடையாளம் காட்டப்படாத சொத்தை பொறுத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4) பிரதிவாதி காபம்பவுண்ட் சுவர் கட்ட முயற்சி செய்ய ஏதாவது புகைப்படம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கது என்றாலும் பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்